முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1532

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.12.2023,** சனிக்கிழமை

1. பேருலகம் ஞானலோகமாக
புண்ணியத்தோடு கூடிய அருள் ஞானத்தை
வரமாகப் பெற்று இந்த கலியுகத்தில்
வள்ளலாக வாரிவழங்குகின்ற அரங்கனே
2. அரங்கனே நீயே கலியின் சிறந்த ஞானி
அற்புதத்தை உலகமெல்லாம் அடையவேண்டி
வரங்களாக நித்தம் நித்தம் சுப்ரமணியர்யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசியாக
3. ஆகவே சோபகிருது தேள் திங்கள்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 23 ம் நாள், 09.12.2023, சனிக்கிழமை)
அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி தொடர்ந்துரைப்பேன்
மிகைபட அரங்கனின் தர்மம்
மேலோங்கி உலகமெல்லாம் பரவி நிற்க
4. நிற்கவே இந்த பேருலகம்
நிலவுலகம் அழியாமை எனும்
அற்புதத்தை இனிதே அடையக்கூடும்
ஆற்றல்பட இந்த மாற்றத்தை
5. அரங்கனைக் கொண்டு ஆறுமுகன் யான்
யானும் உலகமெங்கும் சூட்சுமமாய் நடத்தி வருகின்றேன்
உண்மையான புவியும் மக்களும்
நன்மை கருதி ஞானம் அரங்கன் வழி
6. நாட்டிடுவேன் பயிலுகின்ற மக்களும்
மக்களும் எந்தவித பாதிப்பும் இன்றி
மரணம் வறுமை துன்பங்கள் இன்றி
ஆக்கமுடன் அரங்கனால் தேற்றப்படுவர்

7. ஆறுமுகன் என் ஆசியோடு  இந்த உலகினில் ஆக்கமுடன்
அழியாமை பெற்று பிறவா பெரும்பேற்றுடன்
இனிதே அரங்கன் தேடல்வழியான ஞானிகளாக
ஆகவே மாறி அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–